**கவனிக்க.-** *2024.03.01 ஆந் திகதிய 2374 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2375 - 2024 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.03.07**

*2375 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 94 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 97 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


93 - B 82547 - 353 (2023/03)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஆர். ஏ. நதீர லக்மால் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதிஉத்தம சனாதிபதி அவர்களினால் 2001.05.23 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/கொத்/ ஊனு/ 01/ பிர/ கொ/254 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கெடபுலாவ - ஊனுகல்ஓய இலக்கம் 01 முகவரியில் வசிக்கும் ரத்னாயக முதியன்செலாகெ லியனகெ சிரிபால என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கொ/140/ 988/2004 ஆம் இலக்கத்தின் கீழ் 2004.09.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் எதிர்ப்புகள் இருந்தால் அவற்றை 2024.03.28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

#### மேற்கூறிய அட்டவணை

*நுவரெலியா நிர்வாக மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் திஸ்பனே கோரளையிலுள்ள 460 எச் - ஊனுகல்ஓய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஊனுகல்ஓய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு நு 1339 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் 216 ஆம் இலக்கத் துண்டு பிரிக்கும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் ஹெக்டயார் 0.520 விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு - ஊனுகல்ஓய தோட்டம்.*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 215;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 217;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கம் 218;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 224.*

ஆர். ஏ. நதீர லக்மால்,
பிரதேச செயலாளர்,
திஸ்பனே உப அலுவலகம்.

*2023, ஒற்றோபர் 26.*

*03 - 140/1*

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.

*மத்திய மாகாண சபையின் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஆர். ஏ. நதீர லக்மால் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி/ அரசாங்க அதிபர் அவர்களினால் 1985.01.28 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/ எ/ பி/1881 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹெல்பொடையில் வசிக்கும் குடமுனே கெதர கருணாவதி என்பவருக்கு கையளிக்கப்பட்டு நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 3/698/86 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.06.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும்*

*நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் எதிர்ப்புகள் இருந்தால் அவற்றை 2024.03.28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*நுவரெலிய நிர்வாக மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் இறம்பொடை கோரளை 474D ஹெல்சிரிகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹெல்சிரிகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் தயாரிக்கப்பட்டு நு/எ/பி/1881 ஆம் இலக்க வெளிக்கள தாளில்/நில அளவை உத்தியோகத்தரினால் தயாரிக்கப்பட்ட 239 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 0.403 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான காணித்துண்டு - ஹெல்பொட தோட்டம்.*

*வடக்கு : நு/எ/பி/1881 ஆம் திட்டத்தின் துண்டு இல. 229;*
*கிழக்கு : நு/எ/பி/1881 ஆம் திட்டத்தின் துண்டு இல. 66;*
*தெற்கு : நு/எ/பி/1881 ஆம் திட்டத்தின் துண்டு இல. 214 2/3 மற்றும் 231;*
*மேற்கு : நு/எ/பி/1881 ஆம் திட்டத்தின் துண்டு இல. 232.*

*ஆர். ஏ. நதீர லக்மால்,*
*பிரதேச செயலாளர்,*
*கொத்மலை.*

*2023, நவெம்பர் 15.*

*03 - 140/2*

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்.**

*மத்திய மாகாண சபையின் நுவரெலிய மாவட்டத்தில் அமைந்துள்ள கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் ஆகிய ஆர். ஏ. நதீர லக்மால் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவின் கீழ், அதி உத்தம சனாதிபதி/அரசாங்க அதிபர் அவர்களினால் 2002.01.10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள நு/கொத்/ரொத்/பிர/கொ/528 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான ரொத்ஸ்சைல்ட் புஸ்ஸல்லாவ எனும் முகவரியில் வசிக்கும் கல்ஏதண்டே கெதர பிரேமதாச என்பவருக்கு கையளிக்கப்பட்டு, நுவரெலியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கொ/175/ 265/2002 ஆம் இலக்கத்தின் கீழ் 2002.03.06 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரிமைக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் எதிர்ப்புகள் இருந்தால் அவற்றை 2024.03.28 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.*

**மேற்கூறிய அட்டவணை**

*நுவரெலிய நிர்வாக மாவட்டத்தின் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவின் பல்லேபனை கோரளையிலுள்ள 456 ஈ ரஜஏலள கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரஜஏள எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் அத்தியட்சகர் நுவரெலியா என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு கே. ஆர்.எச். எச். 93 - 11 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் இரேகை வரைதலில் 91 ஆம் இலக்க காணித் துண்டங்களென காட்டப்பட்டுள்ளதும் 0.1012 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதும் கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டதுமான அரச காணித்துண்டு*

(கொடுப்பனவுப் பத்திரத்தில் எல்லைகள் குறிப்பிடப்படவில்லை)

வடக்கு : லொட் 09 14 மற்றும் 13;

கிழக்கு : லொட் 13 மற்றும் வீதி;

தெற்கு : வீதி;

மேற்கு : லொட் 09.

ஆர். ஏ. நதீர லக்மால்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

2023, மே 30.

03 - 140/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்தி கூடத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான ஆவணத்தை தடைசெய்தல் - (104 வது உறுப்புரை தொடர்பான அறிவித்தல்).**

மத்திய மாகாண சபை நுவரெலிய மாவட்ட வலப்பனை பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரான எஸ். பி. லிந்தகுபுர எனும் நான் காணி அபிவிருத்தி சட்டத்தின் 19 (4) உப உறுப்புரைக்கு அமைய மதிப்புக்குரிய சனாதிபதி அவர்களால் 1987.03.02 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் நு/வ/பி 3539 எனும் மூல ஆவணத்தின் உரிமையாளரான ஹரஸ்பெத்தவில் வசிக்கும் பலபிடிய லியனகெ ஆரியரத்ன தி சில்வா வழங்கப்பட்டு நுவரெலிய மாவட்ட பதிவு காரியாலயத்தின் இல. வல/10/196/87 கீழ் 1987.03.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் அட்டவணையில் காணப்படும் காணிக்கு சட்டப்படி வாரிசு ஒருவர் இன்மையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்த போதிலும் அவர்/அவள் வாரிசாக விருப்பமின்மையால் வாரிசு ஒருவர் இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் ஆவணத்தை உரிய சட்டத்தின் 104 வது உறுப்புரையின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புக் கருத்துக்கள் இருக்குமாயின் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரவும்.

**அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தில் வலப்பனை செயலாளர் பிரிவின் யடிபலாத்த பிரிவின் 526 ஹஸ்பெத்த கிராம அலுவலர் பிரிவின் ஹரஸ்பெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள தொகுப்பு எண் F. S. P. 250 எனும் தொகுதியின் திட்டத்தில் இலக்கம் 371 கொண்ட நிலத்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அளவில் றூட் 01, பேர்ச் 17 விசாலமான கீழுள்ளவாறு எல்லைகளைக் கொண்டதுமான அரச நிலம்.

வடக்கு : F. S. P. 250 E துண்டு இலக்கம் 370;

கிழக்கு : F. S. P. 250 P துண்டு இலக்கம் 372;

தெற்கு : F. S. P. 250 E துண்டு இலக்கம் 372;

மேற்கு : F. S. P. 250 E துண்டு இலக்கம் 374.

எஸ். பி. லிந்தகுபுர,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

2023, ஒற்றோபர் 25.

03 - 140/4

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்தி கூடத்தின் 19 ஆம் உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட பிரதான ஆவணத்தை தடைசெய்தல் - (104 வது உறுப்புரை தொடர்பான அறிவித்தல்).**

மத்திய மாகாண சபை நுவரெலிய மாவட்ட வலப்பனை பிரதேச செயலக பிரிவின் பிரதேச செயலாளரான எஸ். பி. லிந்தகுபுர எனும் நான் காணி அபிவிருத்தி சட்டத்தின் 19 (4) உப உறுப்புரைக்கு அமைய மதிப்புக்குரிய சனாதிபதி அவர்களால் 1987.03.02 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள இலக்கம் நு/வ/பி 3540 எனும் மூல ஆவணத்தின் உரிமையாளரான ஹரஸ்பெத்தவில் வசிக்கும் பலபிடிய லியனகெ

ஆரியரத்ன தி சில்வா வழங்கப்பட்டு நுவரெலிய மாவட்ட பதிவு காரியாலயத்தின் இல. வல/10/195/87 கீழ் 1987.03.02 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கீழ்வரும் உப உறுப்புரையில் காணப்படும் காணிக்கு வாரிசு ஒருவர் சட்டப்படி இன்மையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருந்த போதிலும் அவர்/அவள் வாரிசாக விருப்பமின்மையால் வாரிசு ஒருவர் இல்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இவ் ஆவணத்தை உரிய சட்டத்தின் 104 வது உறுப்புரையின் கீழ் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றேன். இது தொடர்பில் எதிர்ப்புக் கருத்துக்கள் இருக்குமாயின் 2024.03.28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் எனக்கு அறியத்தரவும்.

**உப அட்டவணை**

நுவரெலியா நிர்வாக மாவட்டத்தில் வலப்பனை செயலாளர் பிரிவின் யடிபலாத்த பிரிவின் 526 ஹஸ்பெத்த கிராம அலுவலர் பிரிவின் ஹரஸ்பெத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள தொகுப்பு எண் F. S. P. 250 எனும் தொகுதியின் திட்டத்தில் வரைபு அட்டவணையில் இலக்கம் 372 கொண்ட நிலத்துண்டாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அளவில் 03 றூட் 27 பேர்ச் விசாலமான கீழுள்ளவாறு எல்லைகளைக் கொண்டதுமான அரச நிலம்.

வடக்கு : F. S. P. 250 துண்டு இலக்கம் 370, 369, 368;
கிழக்கு : F. S. P. 250 துண்டு இலக்கம் 368;
தெற்கு : F. S. P. 250 துண்டு இலக்கம் 374, 373;
மேற்கு : F. S. P. 250 துண்டு இலக்கம் 374, 371.

எஸ். பி. லிந்தகுபுர,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

2023, ஒற்றோபர் 25.

03 - 140/5

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73126.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L02/04/L. T. L.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 304 கல்கடவல கிராம அலுவலர் பிரிவின் கல்கடவல கிராமத்தின் காணி உத்தியோத்தர் மூலம் வரையப்பட்ட நில வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 05 ஏக்கர் அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு தடல்லகே சமந்தி பிரியங்கா என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : பாதை ஒதுக்கம் மற்றும் களப்பு ஒதுக்கம்;
கிழக்கு : களப்பு ஒதுக்கம்;
தெற்கு : கே. எம். ரத்நாயக்க அனுபவிக்கும் காணி மற்றும் களப்பு ஒதுக்கம்;
மேற்கு : களப்பு ஒதுக்கம்.

02. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட குறித்த நிபந்தனைகள் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.08.09 முதல் 2053.08.08 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும்

(ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும்/ நிர்மாணிக்கப்படவிருக்கும் கட்டடங்களை முறையாகப் பேணிக் காத்தல் வேண்டும்;

(எ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 2023.08.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப் படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 09.

03 - 136

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/72790.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L03/ கெகி/4(III).

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், கெக்கிராவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 610, கனேவல்பொல கிராம அலுவலர் பிரிவின் கனேவல்பொல கிராமத்தின் எப். வி. பி. 1174 இனது 61 இன் பகுதியைக் குறித்துக் காட்டுவதற்காக வரையப்பட்ட நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 05 ஏக்கர், 01 றூட், 27.19 பேர்ச் அளவுடைய அரச காணியினை விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு திரு. அப்துல் கபூர் அமீன் என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : கெகிராவ கனேவல்பொல பிரதான வீதி ஒதுக்கம், A. C. M அஜ்ரோபவினுடைய காணி, நிலாப்தீனுடைய காணி, தயாவதியினுடைய காணி மற்றும் சிறிய மலை;
கிழக்கு : நிலாப்தீனுடைய காணி, தயாவதியினுடைய காணி மற்றும் சிறிய மலை;
தெற்கு : ICC நிறுவனம் அனுபவிக்கின்ற சட்டவிரோத காணி;
மேற்கு : ICC நிறுவனம் அனுபவிக்கின்ற சட்டவிரோத காணி மற்றும் கெக்கிராவ கனேவல்பொல பிரதான வீதி ஒதுக்கம்.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் நியமிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு

உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.10.10 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒவ்வொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்காரர் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை விவசாய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.08.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 09.

03 - 137

---

### காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/56445.
காணி ஆணையாளரின் இலக்கம்.: LCD/16/LND/28/02/FI/16.

### அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

ஹம்பாந்தோட்டை மாவட்டம், லுனுகம்வெஹர பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இலக்கம் 56, லுனுகம்வெஹர புதிய நகர கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த லுனுகம்வெஹர புதிய நகர கிராமத்தின் நில வரைபட இல. දෙබ/සං02/04/12 இன் காணித் துண்டு இலக்கம் 3726C1 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறான 0.0253 ஹெக்டயர் அளவுடைய அரசுக்குச் சொந்தமான காணித் துண்டினை புண்ணிய நடவடிக்கைகளின் பொருட்டு இலங்கை சுமித்ரயோ நிறுவனம் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. **கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

வடக்கு : பிரதேச சபைக்குரிய பாதை மற்றும் LC/LNG/2016/09/01A வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 3726 B;
கிழக்கு : பிரதேச சபைக்குரிய பாதை மற்றும் இவ்வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 3726 C2;

தெற்கு : இவ்வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 3726 C2;
மேற்கு : LC/LNG/2016/09/01 A வரைபடத்தின் காணித்துண்டு இலக்கம் 3726 B.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.04.23 ஆம் திகதியிலிருந்து 30 வருடங்கள்)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 1/2% ஆகும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை புண்ணிய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கட்டடங்களை முறையாக அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டும்;

(ஊ) காணியானது குத்தகைக்கு வழங்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறுமிடத்து இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2023.04.23 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் காணிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுவதன் பொருட்டான துணைக் குத்தகைகள் அல்லது கைமாற்றங்கள் தவிர்ந்த, வேறு துணைக் குத்தகைகளோ அல்லது கைமாற்றங்களோ செய்ய அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஏ) குத்தகை பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணியானது குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 13.

03 - 138

---

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/73142.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L11/04/NOCH/L. T.

## அரச காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

அநுராதபுர மாவட்டம், நொச்சியாகம பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான இல. 332, கல்கஸ்வெவ கிராம அலுவலர் பிரிவின் மாரகஹவெவ கிராமத்தின் காணி உத்தியோகத்தர் மூலம் வரையப்பட்ட NOC/LND/CROWN/332/4 நில வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 01 இன் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு 0.9554 ஹெக்டயர் அளவுடைய அரச காணியினை வாணிப நடவடிக்கைகளின் பொருட்டு திரு. தொன் ரணில் நாவான என்னும் நபர் குத்தகைக்குக் கோருவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. **கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு**:

வடக்கு : அரச காணி;
கிழக்கு : அரச காணி;
தெற்கு : அரச காணி;
மேற்கு : குறுக்கு வீதி மற்றும் வீதி ஒதுக்கம்.

03. கோரிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால்

நியமிக்கப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு விடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2023.08.09 ஆம் திகதியிலிருந்து)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தின் காணியின் சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தப்படும் வருடத்தில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ஐந்து மில்லியன் ரூபாவை விடவும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்குமிடத்து பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் குறித்த வருடத்தில் காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒருவொரு முறையும் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், திருத்தி அமைக்கப்பட்ட குத்தகைப் பணமானது நிறைவடைந்த ஐந்து வருட காலப் பகுதியின் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% சேர்க்கப்பட்டு வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

**தவணைக் கட்டணம்** .- தவணைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) குத்தகைக்கார் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து 01 வருட காலப் பகுதிக்குள் மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளரின் மனங்கவரும் வகையில் காணியினை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரர் இக்காணியினை வாணிப நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளின் பொருட்டு பயன்படுத்தக்கூடாது;

(ஈ) மாகாணக் காணி ஆணையாளர்/உதவிக் காணி ஆணையாளர்/பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் குத்தகையாளர் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2023.08.09 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப் பகுதிக்குள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கூடாதென ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

எம். எச். ஏ. ரீ. மதுஷானி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்குப் பதிலாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 08.

03 - 139

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.